சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 06.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | ராஜகோபால் |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | கடுவங்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 74 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1,4,6 எதிரிகள் ஆஜர். 3 எதிரி வேறு வழக்கில் சிறையில் உள்ளார். தற்போது PT Warrant மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர் ஆவேன். சாமிநாதன் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 10.07.2011 ஆம் தேதி இரவு கடுவங்குடி அக்ரஹாரம் தெருவில் சாமிநாதன் என்பவர் கொலை செய்யப்பட்டுகிடந்தார். அதை கேள்விப்பட்டு நான் அங்கு சென்றேன் என்றும், பின்னர் இறந்து போன சாமிநாதன் என்பவரின் பிரேதம் கடந்த 11.07.2011 ஆம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அவரது பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொள்ளும் போது நான் உடன் இருந்ததாகவும், மேலும் பிரேத விசாரணையின் போது தயார் செய்துள்ள பிரேத விசாரணை அறிக்கையில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கை தொடர்பாக எனக்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் எனது கையொப்பம் உள்ளதாக என்றால் எனக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. எனது கையொப்பம் இதில் இல்லை. உண்மையில் பிரேத விசாரணை மேற்கொள்ளும் போது நான் அங்கு உடன் இருந்தேன் என்றும், இது தொடர்பாக போலீசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றும், சொன்னால் சரியல்ல. எதிரிகளை இந்த

வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.06 16:56:02 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.